DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF THE I ADDITIONAL DISTRICT JUDGE, TIRUVALLUR**

**OS.No : 525/2021 PW : 2**

Name : கீதா Age -

Father's Name Village

Taluk Caste

Solemnly affirmed in accordance with the provision of Act of 1873 on the day of

Date: 07.11.2022

**முதல் விசாரணை**

நான் வாதி, பிரதிவாதிகளின் சகோதரி ஆவேன். வாதி தரப்பு சாட்சி 2 ஆவேன். என் முதல் விசாரணையை வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான்.

**குறுக்கு விசாரணை...**

எனக்கு 18.06.1979ல் திருமணம் ஆனது. எனக்கு எல்லா தேதிகளும் ஞாபகம் இருக்குமா என்று கேட்டால் ஒரு சில தேதிகளை தவிர எல்லா தேதிகளும் ஞாபகம் இருக்கும். எனக்கு ஆங்கிலம் படிக்க தெரியாது. தாவா சொத்தை கிரையம் வாங்க என் தந்தை பிரதிவாதியிடம் பணம் கொடுத்தை நான் பார்த்ததாக என் முதல் விசாரணையில் கூறியிருக்கிறேன். எந்த தேதியில், எந்த இடத்தில் கொடுத்தார் என்று குறிப்பிடவில்லை. என் தந்தை பணம் கொடுத்த தேதி, மாதம் ஞாபகமில்லை. என் முதல் விசாரணையில் உள்ள விவரங்களை வாதி சொல்லி தயார் செய்தோம். அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். வாதி இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை நான்

தனிப்பட்ட முறையில் படித்து பார்த்தேனா என்று கேட்டால் படித்து பார்த்தேன். பிராது மற்றும் எதிர்வழக்குரையில் என்ன சொல்லப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியும். வாதி கடந்த வாய்தாவின் போது குறுக்கு விசாரணையில் என்ன சாட்சியம் அளித்தார் என்று எனக்க தெரியும். 2000ம் வருடம் முதல் என் தந்தைக்கு மறதி வியாதி ஏற்பட்டு அவர் சிகிச்சை எடுத்துக் கொண்டிருந்தார். அவருக்கு ஓரளவு தான் மறதி வியாதி இருந்தது. என்னுடைய தந்தையின் வங்கி கணக்கை என்னுடைய தாயார் தான் கையாண்டிருந்தார். பிரதிவாதி பெயரில் மட்டும் தாவா சொத்தை பொறுத்து கிரைய ஆவணம் பதிவு செய்யப்பட்ட விவரம் 2002ம் வருடமே எங்கள் குடும்பத்தில் உள்ள அனைவருக்கும் தெரியும். எனக்கு விஜயா, உஷா, மாலா, லட்சுமி என்ற 4 தங்கைகள். எனக்கு திருமணமாகி நான் என் கணவர் வீட்டில் என் அம்மா வீட்டிற்கு அடுத்த தெருவில் குடியிருந்தேன். பிரதிவாதி தன் பெயரில் மட்டும் கிரைய ஆவணத்தை ஏன் எழுதி கொண்டார் என்று என் தந்தை பிரதிவாதியிடம் கேட்கவில்லை. ஆனால் என் தாயார் கேட்டார். 2002லேயே நானும், என் சகோதரிகளும் பிரதிவாதியிடம் இது குறித்து கேட்டோம். பிரதிவாதி வீட்டில் மூத்தவர் என்றும் சொத்தை வாதியும், பிரதிவாதி சரிசமமாக பிரித்துக்கொள்ளுங்கள் என்று என் தாயார் சொன்னார். 2000ம் வருடத்தில் பிரதிவாதி பட்டாபிராமில் ஒரு மருந்துகடையை நடத்தினார். அதில் என் மகனான வரதராஜன் அதில் பார்ட்னராக இருந்தார். என் மகன் டி.பார்ம் முடித்திருக்கிறார். அந்த கடையை

2001ம் வருடம் பிரதிவாதி 3ம் நபருக்கு கையெழுத்து போட்டு விற்றுவிட்டார். அதில் பிரதிவாதி எங்கள் பாகத்தை கொடுக்கவில்லை. அந்த கடை நடத்த நாங்களும் பணம் போட்டோம். அந்த விவரத்தை என் முதல் விசாரணையில் சொல்லவில்லை. 2001ல் மருந்துகடையை விற்ற பணத்தில் இருந்து தான் பிரதிவாதி தாவா சொத்தை கிரையம் வாங்கினார் என்று சொன்னால் சரியல்ல. என் தந்தை முழு பணத்தையும் கொடுத்து பிரதிவாதி பெயரில் சொத்தை வாங்கியிருப்பதால் என் தந்தை தான் தாவா சொத்தின் உரிமையாளர் என்று வாதி சாட்சியம் அளித்திருப்பதை நான் ஆமோதிக்கிரேனா என்று கேட்டால் அதை நான் ஆமோதிக்கிறேன். பிரதிவாதி அவருடைய மனைவியின் நகைகளை விற்று தான் தாவா சொத்தில் வீடுகட்டினார் என்று சொன்னால் சரியல்ல. முதலில் தாவா சொத்தில் தரைதளம் மட்டும் கட்டுவதாக இருந்தது. தரைதளத்தை கட்டும்போது என் தந்தை இறந்துவிட்டார் என்றும் ஆகவே என் அம்மாவின் விருப்பப்படி பிரதிவாதியை தரைதளத்தில் வாடகைக்கு வைப்பதற்காக பிரதிவாதி தான் குடியிருக்க முதல்தளத்தை கட்டினார் என்று சொன்னால் சரியல்ல. நான் அங்கன் வாடியில் ஆசிரியையாக வேலை பார்த்து ஓய்வு பெற்றுவிட்டேன். என் தாயாருக்கு புற்றுநோய் ஏற்பட்டபோது பிரதிவாதியும் சிகிச்சைக்கு செலவு செய்தார் என்றால் சரியல்ல. பிரதிவாதி 1 ரூபாய் கூட செலவு செய்யவில்லை. வாதியின் மகளில் திருமண நிச்சயதார்த்தத்தில் எனக்கும் பிரதிவாதியின் மனைவிக்கும் இடையே சண்டை ஏற்பட்டு அதிலிருந்து நானும்,

பிரதிவாதியும் பேசிக்கொள்வதில்லை. பட்டாபிராமில் பிரதிவாதி மருந்துகடையை நடத்தும்போது என் மகன் அதில் பார்ட்னர் இல்லை என்றும் என் மகன் டி.பார்ம் படித்ததால் அவர் அந்த மருந்துகடையில் இருந்தார் என்றும் சொன்னால் சரியல்ல. அந்த மருந்து கடையில் பிரதிவாதி எங்கள் பங்கை கொடுக்காததால் 2001ம் வருடத்திலிருந்து எனக்கும் பிரதிவாதிக்கும் இடையே மனவருத்தம் இருந்தது. சாந்தி என்பவரது பெயரில் தான் அந்த கடைக்கு உரிமம் இருந்தது என்றும் என் மகன் எதுவும் செய்யவில்லை என்றும் ஆனால் என் மகன் பணம் கேட்டு பிரதிவாதி கொடுக்காததால் நாங்கள் பிரதிவாதியின்மீது மன வருத்தத்தில் இருக்கிறோம் என்றால் சரியல்ல. அந்த பிரச்சனை மற்றும் நிச்சயதார்த்தத்தில் ஏற்பட்ட பிரச்சனையினால் வாதிக்கு சாதகமாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Sd/- S. Ganapathisamy,
I Additional District and Sessions Judge,
Tiruvallur.